**O.S. No. 185 /2014**

**Date: 22.1.2026**

**பி.வா.சா.1 கருப்பசாமி_**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

கண்ணப்பத் தேவரின் தந்தையின் பெயர் மருதப்ப தேவர். மருதப்ப தேவருக்கு 4 வாரிசுகள் யார் யார் என்றால் கருப்பசாமி தேவர், பெருமாள் தேவர்,. உடையார் தேவர், கண்ணப்ப தேவர் . நான் சொல்லக்கூடிய ஆவுடையம்மாளை ஆவுடையம்மாள் என்றும் ஆவுடைத்தாய் என்றும் கூப்பிடுவோம். 1996 க்கு முன்னால் கண்ணப்பத் தேவர் உயிருடன் இருக்கும் காலகட்டத்தில் ஆவுடையம்மாள் என்பவர் கண்ணப்பத் தேவர் என்பவரின் மனைவி என்பதை காட்டக்கூடிய ஆதாரங்களை எதையும் பார்த்துள்ளீர்களா என்றால் பட்டாவை பார்த்துள்ளேன். 1986 ல் உள்ள பட்டாவில் பார்த்துள்ளேன். மேற்படி பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். நான் சொல்வது போல் ஆவுடையம்மாள் என்பவர் கண்ணப்ப தேவர் என்பவரின் மனைவி என்கிற அந்தஸ்த்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. ஆவுடையம்மாள் என்பவர் கண்ணப்ப தேவர் என்பவரின் மனைவி என்பது இந்த சொத்துக்கள் அனைத்தையும் அபகரிக்கக் கூடிய வகையில் 2004 ம் ஆண்டுக்கு முன்பு எங்களால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மு.வ.190/2014 வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை மட்டுமே கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், விளம்புகை கோராததால் அந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்கள் அனைத்தும் கண்ணப்ப தேவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தையும் ஆடு வளர்த்து , கூட்டுறவு சங்கத்தில் அடமானம் வைத்து அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். 04.08.1996 ல் கண்ணப்பத் தேவர் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். கண்ணப்பத் தேவர் என்பவரின் இறப்பு சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.10 இறப்பு சான்றில் உள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானதா என்றால் உண்மையானது. நான் தாக்கல் செய்த ஆவணத்திற்கு மாறுபட்டு நான் கட்சி செய்தேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.11 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள கண்ணப்பத் தேவர் என்பவர் பி.வா.சா.ஆ.,10 ல் கண்ட கண்ணப்பத் தேவரின் உடன் பிறந்த சகோதரரான கருப்பசாமி தேவரின் மகன் ஆவார். கருப்பசாமி தேவருக்கு இந்த சொத்தில் எந்த பங்கும் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.11 ஆவணத்தில் கண்ட கண்ணப்பத் தேவருக்கு இரண்டு மனைவி உண்டு அவர்கள் பெயர்கள் எனக்கு தெரியாது. கண்ணப்பத் தேவர்

உயிருடன் இருந்தபோது 3ம் பிரதிவாதிக்கு 50,000/-அடமானம் எழுதிக் கொடுத்தார். மேற்படி அடமானத்தைப் பொறுத்து வசூல் செய்தவற்காக 3ம் பிரதிவாதி பாலமுருகன் அவர் சொந்த சகோதரி உமா பார்வதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார். பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தினை பிறப்புவித்து வைத்த ஆவுடையம்மாள் என்பவர் எந்த ஆண்டு காலமானர் என்றால் 2004ம் ஆண்டு காலமானார். மேற்படி உயில் ஆவணத்தினை எழுதி வைத்த ஆவுடையம்மாள் என்பவருக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது என்றாலும், இது உரிமையற்ற நபரால் கூட்டுச் சேர்ந்து எழுதி வைத்த ஆவணம் என்றால் சரியல்ல. கண்ணப்பத் தேவர் இறந்த பின்னர் ஆவுடையம்மாள் பெயருக்கு பட்டா மாறுதல் செய்து அதன் பின்பே உயில் எழுதினோம் என்றால் சரிதான். மேற்படி உயிலில் யார் யார் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் வேலுச்சாமி, மற்றொறு நபர் மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அருகில் இருந்த நபர். வேலுச்சாமி தேவர் தற்போது உயிருடன் இல்லை. மேற்படி உயிலில் கையொப்பம் செய்த 2ம் சாட்சியான மாடசாமி என்பவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி மாடசாமி என்பவருக்கு ஆவுடையம்மாள் என்பவர் யார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். இந்த உயில் ஆவணம் உண்மையான ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. தற்போது வரை தபசில் சொத்து என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது. பி.வா.சா.ஆ.4 ஆவணம் மருதாத்தாள் என்பவர் எனக்கு எழுதிக் கொடுத்த ஆவணத்தின் அசல் ஆவணம் வழக்கறிஞரிடம் உள்ளது. மருதாத்தாள் என்பவர் எனக்கு அத்தை ஆவார் எனது அப்பாவுடன் பிறந்தவர். நான் இந்த உறவு முறையை வைத்துக்கொண்டு பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை உற்பத்தி செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. வாதிகள் கண்ணப்பத்தேவர் என்பவரின் தந்தையார் வழி உறவினர்கள். இறந்து போன கண்ணப்பத்தேவருக்கு வாதிகள் என்ன வேண்டும் என்றால் பி.வாசா.ஆ.11ல் கண்ட கருப்பசாமி தேவர் மகன் கண்ணப்பத் தேவரின் மக்கள் ஆவார். தபசில்சொத்துக்கள் அனைத்தும் கண்ணப்பத்தேவருக்கு பூர்வீகமான சொத்துக்கள் அல்ல அவை அனைத்தும் கிரையம் பெறப்பட்டவை. கண்ணப்பத் தேவர் எந்த ஆண்டு கிரையம் பெற்றார் என்றால் நான் 1960ல் பிறந்தேன் அவர் அதற்கு முன்பே கிரையம் பெற்று விட்டார். தபசில் சொத்துக்கள் அனைத்தும் அவரது பூர்வீக சொத்துக்கள் என்றாலும், நான் இந்த வழக்குக்காக கிரையம் பெற்றவை

என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாத்தா பெயர் முத்தையா தேவர். முத்தையா தேவர் மனைவி பெயர் வள்ளித்தாய். முத்தையா தேவருக்கு மொத்தம் 8 வாரிசுகள் 1.முத்தம்மாள், 2.பெருமாள் தேவர், 3. கண்ணப்பத் தேவர் மனைவி மருதாத்தாள், 4. வெள்ளத்தாய், 5.சங்கலிங்கத் தேவர், 6.ஆவுடைத்தாய். 7.முத்தாத்தாள், 8.பரமையாத் தேவர் . ஆவுடைத்தாய் எனக்கு அத்தை உறவு முறை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதல் பக்கத்தில் கீழ் இருந்து 4ம் வரியில் அடித்தல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அடித்தல் உண்டு என்று சொல்லி அதற்குண்டான குறிப்புகள் எழுதியுள்ளதா என்றால் இல்லை. திருத்தல் ஏன் இல்லை என்றால் அது பற்றிய விவரம் எனக்கு தெரியாது. முதல் பக்கத்தில் கீறல் ஆவுடையம்மாள் என்று மட்டும் எழுதப்பட்டுள்ளது ஆனால் கைரேகை எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். தபசில் சொத்தானது கண்ணப்பத் தேவர் இறந்தபின்னர் அவருக்கு நேரடியாக வாரிசுகள் இல்லாததால் 2ம்கட்ட வாரிசுகளான அவருடைய சகோதரர் மக்களுக்கு பாத்தியப்படக்கூடியது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ஆவணம் முறையாக எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.8 ஆவணம் பட்டா உரிமையற்ற நபர்களின் பெயரில் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் எனது அக்காவிடம் இருந்து கிரையம் பெற்றதை நான் பட்டாவாக ஏற்படுத்திக் கொண்டேனா என்றால் இதுவரை இல்லை. எனது அக்கா மருதாத்தாள் என்பவரின் பெயரில் வீட்டு பட்டா மட்டும் உள்ளது வேறே எந்த பட்டாவும் இல்லை. பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.8 ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்ட காலகட்டத்தில் ஆவுடையம்மாள் உயிருடன் இருந்திருப்பது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தினை பொறுத்து நான் மோசடியாக உற்பத்தி செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. தபசில் சொத்துக்கள் கண்ணப்பத்தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாக இருப்பதால் பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. கண்ணப்பத் தேவரின் இறப்பிற்கு பின்பு இந்த வாதிகளிடமும், வாதிகளின் முன்பாத்திஸ்தரிடமும் அனுபவம் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லக் கூடிய குற்றவியல் வழக்கு என்னால் பொய்யாக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. மு.வ.68/2005 வழக்கின் தீர்ப்புத் தொகையினை தாங்களாக செலுத்தி ஒரு உரிமையினை ஏற்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறோம் என்று

சொன்னால் சரியல்ல. தபசில் சொத்து வாதிகளின் அனுபவத்தில் இருந்து வருவதால் அவர்கள் கோரிய விளம்புகை மற்றும் நிரந்தர ஏவுகட்டளை பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. சொத்தின் உரிமையில் தீர்க்கக்கூடிய பிரச்சனை இருப்பதால் அதைப் பொறுத்து விளம்புகை கோராமல் நான் நிரந்தர உறுத்துக்கட்டளை மட்டும் கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண். 185/2014 ல் வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றாலும், அசல் வழக்கு எண். 190/2014 ல் வழக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

(Sd/–P.Mahindra Varma)
Subordinate Judge,
Sankarankovil.